**தலைப்பு 220 – ஆயுர்வேத திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 220 – ஆயுர்வேத திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 14 ஆம் திகதி திணைக்களத்தின் ஆணையாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல், அமுல்ப்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப் பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 2,573.10 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை அதில் ரூபா 1,852.42 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடுகளில் ரூபா 720.68 மில்லியன் அதாவது 28.01 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 1,272.50 | 1,239.52 | 32.98 | 2.59 |
| மூலதனம் | 1,300.60 | 612.90 | 687.70 | 52.88 |
| **மொத்தம்** | **2,573.10** | **1,852.42** | **720.68** | **28.01** |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 22001 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 40.00 | 33.04 | 31.00 | 36.22 | 190.00 | 77.17 |

**2.3 பொது வைப்புக் கணக்குகள்**

திணைக்களத்தின் கீழுள்ள 04 பொது வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 63.19 மில்லியன் ஆகும். விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0013/0084/000 | 1.42 |
| 6000/0000/00/0002/0127/000 | 3.23 |
| 6000/0000/00/0016/0076/000 | 58.41 |
| 6000/0000/00/0019/0019/000 | 0.13 |
| **மொத்தம்** | **63.19** |

**2.4 கணக்காய்வு அவதானிப்பு**

ஆயுர்வேத திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களிற்கு உட்பட்டுத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

திணைக்களத்தால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேடுகளின் வகை | | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ii) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

**3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

நிதிப்பிரமாணம் 272(2) இன் பிரகாரம் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமல் திணைக்களத்திற்குரிய ரூபா 2,557,084 பெறுமதியான 21 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் காணமல் போயிருந்தன.

**3.3 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்**

திணைக்களத்திற்கு 2014 ஆம் ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களுக்கும், மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 19 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் 2017 மே 31 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்படாதிருந்ததுடன் அந்த ஐயவினாக்களுக்குரியதாக கணிப்பீடு செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 3,058.58 மில்லியன் ஆகும்.

**3.4 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்**

ஆராய்ச்சிகளிற்குத் தேவையான 14 தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகள் 2013 திசெம்பர் 23 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அப்பதவிகளிற்காக உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆராய்ச்சி செயற்பாடுகளிற்காக ரூபா 5.00 மில்லியன் மூலதன நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்நிதியேற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக, நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் இயன்றளவு சாத்தியமானதாக முழுமையாகவும் சரியாகவும் மதிப்பீடுகளை தயாரிப்பதற்கும் ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததன் காரணமாக 10 மூலதன செலவின விடயங்களிற்கான ரூபா 1,106.70 மில்லியன் தேறிய நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 640.43 மில்லியன் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அச் சேமிப்பு ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதியேற்பாட்டில் 54 சதவீதம் தொடக்கம் 97 சதவீதம் வரையான வீச்சளவில் காணப்பட்டது.

**3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

22001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 2,134,651 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகள் 05 ஆண்டுகள் தொடக்கம் 10 ஆண்டுகள் வரையிலான கால வீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அந்நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) 05 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,240,270 கூட்டுத்தொகையான ஆதனக் கடன்களுக்குரிய இரத்துச் செய்ய முடியாத அட்டோர்னி அனுமதிப்பத்திரம் காணிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.6 பொது வைப்புக் கணக்குகள்

கேள்வி வைப்புக் கணக்கிலுள்ள ரூபா 160,000 கூட்டுமொத்தமான 8 வைப்பு மீதிகள் காலம் கடந்திருந்த போதிலும் அவ் வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் 2017 ஏப்ரல் 28 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.7.1 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் போதுமானளவு பதவியணியினர் அவற்றிற்கு இணைக்கப்பட்டிருக்காதமையால் போதுமானளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 3.7.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளிற்குரிய செயலாற்றல் அறிக்கைகள் திணைக்களத்தினால் 2017 யூலை 14 ஆம் திகதி வரையிலும் பாரளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 மார்ச் 31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக வருடாந்தப் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2017 மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 யூலை 14 ஆம் திகதி வரையிலும் வருடாந்தப் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) யக்கல ஆயுர்வேத வைத்தியசாலையில் முடிவடைந்த மற்றும் உலர்ந்த மருந்துகள் தொடர்பில் இருப்பு மட்டங்கள் மற்றும் மீள்கட்டளைத் தொகைகளை பேணுவதன் மூலம் முறையான இருப்புக் கட்டுப்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக 2016 ஒக்தோபர் 20 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீட்சிப்பின் போது வைத்தியசாலைக்கு அத்தியாவசியமான 86 வகையான மருந்துகளின் இருப்பு மீதிகள் பூச்சியத்திற்கு வந்திருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

### 3.9 பொறுப்புக்களை ஏற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,107,158 பொறுப்புக்கள் காணப்பட்டதென ஒதுக்கீட்டுக் கணக்கில் அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய பற்றுச்சீட்டுக்களோ அல்லது 2017 ஆம் ஆண்டில் கொடுப்பனவு

செய்யப்பட்டதென உறுதிப்படுத்துகின்ற உறுதிச்சீட்டுக்களோ கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காததால் அப்பொறுப்புக்களினது பெறுமதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) நிதிப்பிரமாணம் 94(1) இற்கு முரணாக 28 செலவின விடயங்களிற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளை பயன்படுத்திய பின்னர் சேமிப்புக்களை மிகைத்து ரூபா 19.63 மில்லியன் பொறுப்புக்களிற்காக கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

**3.10 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | |
| (i) நிதிப்பிரமாணம் 104 | மீளாய்வாண்டின் போது திணைக்களத்திற்கு சொந்தமான மோட்டார் வாகனங்களிற்கு 8 சந்தர்ப்பங்களில் விபத்துக்கள் ஏற்பட்டிருந்ததுடன் ஏற்பட்ட இழப்பு ரூபா 474,750 ஆகும். அவ் இழப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ் இழப்புக்களில் ரூபா 316,650 தொகை மாத்திரம் காப்புறுதி இழப்பீடுகளினால் மேவுகை செய்யப்பட்டிருந்தன. |
| (ii) நிதிப்பிரமாணம் 237(ஆ) | 2016 திசெம்பர் 31 வரையிலும் உரிய வழங்குனர்களால் வழங்கல்கள் மற்றும் சேவைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. சான்றுறுதிப்படுத்தும் உத்தியோகத்தரால் சான்றுறுதிப்படுத்தப்பட்ட கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களிற்காக நிதிப்பிரமாணம் 237 இற்கு முரணாக ரூபா 33.66 மில்லியன் பெறுமதியான 9 காசோலைகள் கையொப்பமிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. அக் காசோலைகள் உரிய வழங்குநர்களிற்கு கையளிக்கப்படாது கையில் காணப்பட்டன. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 1 மற்றும் 22 ஆம் பிரிவுகள் | சில உத்தியோகத்தர்கள் வழமையொன்றாக வருடாந்தம் உரித்துள்ள விடுமுறைகளிற்கு மேலதிகமாக விடுமுறைகளைப் பெற்றிருந்ததுடன் அதில் சிலர் பெற்றிருந்த விடுமுறைகள் 90 நாட்கள் முதல் 217 நாட்கள் வரையான வீச்சளவில் காணப்பட்டன. சம்பளமற்ற விடுமுறை பெறப்பட்ட மாதத்திலிருந்து அடுத்துவரும் மாதத்திலிருந்து சம்பளமற்ற விடுமுறை எண்ணிக்கைக்குரிய சம்பளத்தின் பெறுமதியானது சம்பளத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய போதிலும் திணைக்களம் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 3.11 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துதல்

செயற்திட்டத்தை நிறைவேற்றாது கைவிடுதல் மற்றும் செயற்திட்டத் தாமதங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) டெங்கு, கொலஸ்ட்ரோல், நீரிழிவு, புற்றுநோய், சிறுநீரக நோய்கள் போன்ற தொற்றாத நோய்களின் சிகிச்சை முகாமைத்துவ முறைமை தொடர்பான ஆராய்ச்சி முன்னேற்ற செயற்திட்டமொன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்தால் 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அச்செயற்திட்டத்திற்காக 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் உள்நாட்டு நிதியங்களிலிருந்து ரூபா 892.00 மில்லியன் கூட்டுமொத்தமான நிதியேற்பாடுகள் செயற்திடட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்தன. அந்நிதியேற்பாடுகளிலிருந்து 2016 திசெம்பர் 31 வரையிலும் ரூபா 440.93 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்டத்திற்காக 2013 திசெம்பர் 23 இலிருந்து அங்கீகரிக்கப்பட்ட நிரந்தரப் பதவியணியினர் 269 ஆக இருந்த போதிலும் அப்பதவியணியினரில் அத்தியாவசியமான பதவிகளான 02 விஞ்ஞானி பதவிகள், 06 விஞ்ஞானவியல் உத்தியோகத்தர் பதவிகள், 18 ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகள், 03 மருத்துவ ஆராய்ச்சி தொழில்நுட்பவியலாளர் பதவிகள் மற்றும் 03 அங்கீகரிக்கப்பட்ட விசேட வைத்திய உத்தியோகத்தர் பதவிகள், 07 அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி உதவியாளர் பதவிகள் மற்றும் 12 தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகள் உள்ளடங்கலாக 129 பதவிகள் 2016 திசெம்பர் 31 வரையிலும் வெற்றிடங்களாக காணப்பட்டன.

(ii) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 164.97 மில்லியன் மற்றும் மீளாய்வாண்டின் போது ரூபா 38.05 மில்லியன் பெறுமதிக்கு ஆராய்ச்சி உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அத்தியாவசியமான பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படாததன் காரணமாக 2017 சனவரி 24 வரையிலும் ரூபா 103.12 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் பயன்படுத்தப்படாது விளைவற்றிருந்தது. மேலும், தேவையான இரசாயனப் பொருட்கள் கொள்வனவு செய்யப்படாததன் காரணமாக ரூபா 1.91 மில்லியன் உபகரணமொன்று பயன்படுத்தப்பட முடியாதிருந்தது.

(ஆ) பாரம்பரிய அறிவை பாதுகாத்தல் மற்றும் சுதேச மருத்துவத்தை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் தீவு முழுவதும் வசிக்கின்ற அனைத்து பாரம்பரிய வைத்தியர்களிற்கும் உரித்தான அறிவைப் பாதுகாப்பதற்கும் அதற்காக செவிப்புல கட்புல தகவல் உலகளாவிய மையத்தை ஸ்தாபிப்பதற்காக பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்தால் சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்டமொன்று 2015 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 27.00 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செவிப்புல கட்புல ஊடக பிரிவை ஸ்தாபிப்பதற்காக ரூபா 12.00 மில்லியன் நிதியேற்பாடு மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 23.56 மில்லியன் செலவிட்டு அப்பிரிவிற்குத் தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இந்த பிரிவின் தொழிற்பாடுகளை செயற்படுத்துவதற்கு நேரடியாக தேவைப்பட்ட செவிப்புல கட்புல பிரிவின் பொறுப்பு உத்தியோகத்தர், நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், வீடியோ பதிப்பாளர், ஒலிப் பதிவாளர் மற்றும்

உதவியாளர், கணனி இயக்குனர் ஆகிய 07 பதவிகள் மற்றும் 03 புகைப்படக் கலைஞர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அப் பதவிகளிற்கு ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காததால் உரிய உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) பாரம்பரிய அறிவைப் பாதுகாப்பதற்காக பாரம்பரிய வைத்தியர்கள் பற்றிய தகவல்களை பெறுதல், பாரம்பரிய அறிவைப் பாதுகாத்தல், ''குருகுல'' ஊடாக பாரம்பரிய அறிவை தொடர்தல், பாரம்பரிய அறிவு தொடர்பான புலமைச் சொத்து உரிமையை உறுதிப்படுத்துதல் மற்றும் பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்தில் காணப்பட்ட பழைய புத்தகங்களைப் பாதுகாத்தல் போன்ற தொழிற்பாடுகளிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 15.00 மில்லியன் நிதியேற்பாடுகள் செவிப்புல கட்புல ஊடக பிரிவிற்கு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்தன.

(iii) செவிப்புல கட்புல பிரிவொன்றாக தொழில்சார் மட்டத்தில் ஸ்ரூடியோ அமைக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக அறிவு மற்றும் பயிற்சியை கொண்டிராத ஆயுர்வேத வைத்தியரொருவர் அப்பிரிவிற்கு இணைக்கப்பட்டிருந்தார். இதனால் செவிப்புல கட்புல பிரிவில் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் அடையப்பட்டிருக்காததுடன் ஆயுர்வேத வைத்தியரொருவராக அவரிடமிருந்து பெறப்பட வேண்டிய சேவையை திணைக்களம் இழந்திருந்தது.

(iv) செயற்திட்டத்தின் முக்கிய நோக்கங்களான பாரம்பரிய அறிவினை பாதுகாத்தல் மற்றும் சுதேச மருத்துவத்தை மேம்படுத்துதல் தொடர்பில் திட்டமிடப்பட்ட மருத்துவப் புத்தகங்கள், மருத்துவ உபகரணங்கள், ஏனைய மருத்துவத் தகவல்களைப் பாதுகாத்தல், 10 தலைமுறைகளிலுள்ள பாரம்பரிய மாணவர்களின் பயிற்சி, சுதேச பாரம்பரிய அறிவு தொடர்பான புலமைச் சொத்து உரிமைகளை உறுதிப்படுத்துதல், பாதுகாக்கப்பட்ட 100 புத்தகங்களின் பிரதிகள் மற்றும் வருடாந்த சஞ்சிகைகளை வெளியிடுதல் மற்றும் பாரம்பரிய அறிவை பாதுகாப்பதற்காக உலகளாவிய மையத்தை ஸ்தாபித்தல் போன்ற நோக்கங்களை அடைவதற்கு தவறியிருந்தது.

(இ) சுதேச மருத்துவ முறைமையானது தற்கால மற்றும் எதிர்கால தலைமுறையின் நோய்களைத் தடுப்பதற்காக பயன்படுத்தக்கூடிய முறைமையொன்று இருந்ததால் அதன் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பிற்காக படிமுறைகளை எடுப்பது தற்போதைய தேவைப்பாடாக உள்ளது. தீர்வொன்றாக, சுதேச மருத்துவத்தை கற்கின்ற உள்ளூர் மற்றும் வெளிநாட்டு மாணவர்களிற்கும் சுதேச மருத்துவத்தில் ஆராய்ச்சிகளில் ஈடுபடுகின்ற ஆராய்ச்சியாளர்களிற்கும் சிறந்த வாய்ப்பை வழங்கும் நோக்கில் மைத்திரிபால சேனநாயக்க ஞாபகார்த்த பாரம்பரிய ஆராய்ச்சி வைத்தியசாலை மற்றும் நூதனசாலையை மிகிந்தலை இலுப்புகன்னி பிரதேசத்தில் நிர்மாணிப்பதற்காக 2008 யூலை 18 இல் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மொத்த பொறியியலாளர் மதிப்பீடு ரூபா 586.70 மில்லியன் தொகையானதுடன் 04 கட்டங்களில் பூர்த்தி செய்யப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க, இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கும் ரூபா 31.30 மில்லியன் கிரயத்தில் 630 நாட்களிற்குள் முதலாவது கட்டத்தை நிர்மாணிப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 39.95 மில்லியன் கிரயத்தில் முதலாவது கட்டத்தை நிர்மாணித்து பூர்த்தி செய்வதற்கு 2012 நவம்பர் 26 இல் இலங்கை பொறியியல் கூட்டுத்தாபனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், ரூபா 8.65 மில்லியனால் ஒப்பந்தப் பெறுமதியை அதிகரித்து முதலாவது கட்டத்திற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் அதற்கான அதிகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்துடன் தொடர்புடைய கொடுப்பனவுகளிற்காக சமர்ப்பிக்கப்பட்ட மொத்த விலைப்பட்டியல் பெறுமதி ரூபா 29.42 மில்லியன் தொகையானதுடன் 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளிற்காக நிதியேற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்காததால் 2014 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 2.84 மில்லியன் பெறுமதியான விலைப்பட்டியலொன்றிற்கும் 2016 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 4.83 மில்லியன் பெறுமதியான இரண்டு விலைப்பட்டியல்களிற்கும் 2017 மார்ச் 30 வரையிலும் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) இந்த செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்காக 2008 ஆம் ஆண்டின் போது அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் 2012 திசெம்பர் மாதத்தின் போது அதன் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. செயற்திட்டத்தின் மிகுதி 03 கட்டங்களின் வேலைகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான நிதியேற்பாடுகளை ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததால் செயற்திட்டத்தின் நோக்கத்தை அடைவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முடியாதிருந்தது.

(iv) முதலாவது கட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடங்கள் திணைக்களத்திற்கு 2017 மார்ச் 31 ஆம் திகதி கையளிக்கப்பட்டிருந்தது. அக் கட்டிடங்கள் தொடர்பாக 2017 யூலை 12 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- கதவுகள் பூட்டுத் திறப்புக்களின் கீழ் இருந்தமையால் கட்டிடத்தின் உட்பகுதியை பரீட்சிக்க முடியாதிருந்ததுடன் பொறியியல் கூட்டுத்தாபனத்தால் வேலைத்தள பிரிவுகள் அகற்றப்படாமையால் வேலைத்தளத்தினுள் 2 களஞ்சியங்கள் காணப்பட்டன.

- கையளிக்கப்பட்ட பின்னர் 2017 யூலை 14 வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்காததன் காரணமாக கட்டிடத்தைச் சுற்றி களைச் செடிகள் வளர்ந்திருந்தன. யன்னல்களிற்கு கிறில்கள் பொருத்தப்பட்டிருக்காததுடன் யன்னல் மடிப்புக்களிற்குள் தெளிவாகத் தெரிகின்ற கண்ணாடிகள் பொருத்தப்பட்டிருப்பதனால் அதன் பாதுகாப்பு பிரச்சனைக்குரியதாக இருந்தது.

- தண்ணீர் மற்றும் மின்சார இணைப்பை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- கூரையைச் சுற்றி இடப்பட்ட இணைப்புச் சட்டங்கள் சில இடங்களிலிருந்து கழற்றப்பட்டிருந்ததுடன் அத்திவாரத்தின் மேற்பகுதி பத்திரிப்பு சில இடங்களில் வெடித்திருந்தது.

- சுவரிற்கும் கூரைக்கும் இடையில் பெரிய இடைவெளி விட்டு நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததனால் பரீட்சிக்கும் சந்தர்ப்பம் வரையிலும் புறாக்கள் முட்டையிடும் இடமாக மாறியிருந்தது. யன்னல் சட்டக மூடியின் மேற்பகுதி (2½ அடி) மரத்தினாலான பட்டியுடன் பொருத்தப்பட்டிருந்ததுடன் இரண்டு கிறில் கம்பிகளிற்கிடையில் பெரிய இடைவெளி காணப்பட்டமையால்

கட்டிடத்திற்கு வெவ்வேறு மிருகங்கள் வருவதற்கான சாத்தியத்தன்மை காணப்பட்டது.

(ஈ) 2014 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் சில மாவட்டங்களிற்கு பரவியிருந்த சிறுநீரக நோயை ஒழிப்பதற்காக சுதேச மருத்துவ விஞ்ஞானத்திலிருந்து பெறப்பட வேண்டிய பங்களிப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் மதவாச்சியில் 50 கட்டில்களுடன் வைத்தியசாலையொன்றை நிர்மாணிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பொறியியல் மதிப்பீடு ரூபா 53,836,395 தொகையானதுடன் இது பெறுகை நடைமுறையிலிருந்து விலகி தற்போதைய வேண்டுதலொன்றாக கருதப்பட்டு 2014 ஆம் ஆண்டு அதனாலேயே நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்படுவதற்கு பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பெறுகை நடைமுறையிலிருந்து விலகியமைக்கான அங்கீகாரம் அமைச்சரவையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.4 ஆம் வழிகாட்டலில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளிற்கு இணங்காமல் மொத்தப் பொறியியலாளர் மதிப்பீட்டிற்குச் சமமான தொகை செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் இலங்கை இராணுவத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(iii) 2012 ஆகஸ்ட் 07 ஆம் திகதிய 02/2012 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் வேலைத்தள மாற்றங்கள் மற்றும் அத்தியாவசியமான புதிய நிர்மாண வேலைகளினால் மதிப்பீடானது ரூபா 85.37 மில்லியன் வரை திருத்தப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திருத்திய மதிப்பீட்டின் பிரகாரம் செலுத்தப்பட வேண்டிய ரூபா 31.54 மில்லியன் மீதி இலங்கை இராணுவத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(iv) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் இந்த ஒப்பந்தம் தொடர்பாக இரு தரப்பினர்களிற்குமிடையில் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவதற்கும் முற்பண பிணைமுறி மற்றும் செயலாற்றல் பிணைமுறியை பெறுவதற்கும் நிறுத்திவைத்தல் பணத்தை கழிப்பதற்கும் உரிய கொடுப்பனவுகளிற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட வேலைப்பகுதியை மதிப்பீடு செய்வதற்கும் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட வேலை தொடர்பாக பொறியியலாளர் சான்றிதழை பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 2015 திசெம்பர் 31 வரை ரூபா 85.37 மில்லியன் திருத்திய ஒப்பந்தக் கிரயம் முழுமையாக செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2017 யூன் 30 வரையிலும் இந்த வைத்தியசாலை நிர்மாணம் பூர்த்திசெய்யப்பட்டு திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) வைத்தியசாலை தொடர்பில் 2017 யூலை 12 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- வைத்தியர் அரசாங்க விடுதிகளிலுள்ள 04 அறைகள் மற்றும் தாதியர் அரசாங்க விடுதிகளிலுள்ள 04 அறைகள் என்பவற்றின் தளங்கள் மாபிள் பதிக்கப்பட்டிருக்காததுடன் அவற்றில் யன்னல்கள், கதவுகள், காற்றாடிகள் மற்றும் மின்சார பிளக்குகள் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

- 800 அடி பரப்பளவான சுவர் நிர்மாணிக்கப்பட்டிருக்காததுடன் நிர்மாணிக்கப்பட்ட சுவரின் பகுதியொன்றிற்கு சீமெந்து பூசப்பட்டிருக்கவில்லை.

- 13 அடி நீளமான 03 வாயில் கதவுகள், 05 அடி நீளமான ஒரு வாயில் கதவு மற்றும் 590 அடி நீளமான வடிகாண் முறைமை என்பன நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.12 செயல்நடவடிக்கைத் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட மொத்த நிதியேற்பாடு ரூபா 34.73 மில்லியன் தொகையுடைய 23 நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மொத்த நிதியேற்பாடு ரூபா 1,028.60 மில்லியன் தொகையான 17 நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட முடியாதிருந்தது. எவ்வாறாயினும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காத 26 நடவடிக்கைகள் ரூபா 14.96 மில்லியன் தொகை செலவிட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் நோக்கங்களை அடைவதற்கான ஆக்கபூர்வமான கருவியொன்றாக செயல்நடவடிக்கைத் திட்டம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**3.13 அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவை நடைமுறைகளைப் பின்பற்றாமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 148.20 மில்லியன் செலவிட்டு பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்திற்கான பரீட்சிக்கும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.4 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், பாரிய ஒப்பந்தங்கள் கூறுகள் அல்லது பொதிகள் முறையில் சிறிய பகுதிகளாக பிரிப்பதன் மூலம் கொள்வனவு செய்ய முடியும் என்பதால் பாரிய மற்றும் சிறிய ஒப்பந்ததாரர்கள் பங்குபற்ற முடிந்திருக்கும். அதற்கு இணங்காமல் கொள்வனவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட 53 உபகரணங்கள் முழுவதும் ஒரு பொதியாக கருதப்பட்டு விலைமனுக்கள் கோரப்பட்டிருந்தன. அதற்கிணங்க விலைமனுக்களை சமர்ப்பிக்கத் தவறுதலின் அடிப்படையில் அவ் விலைமனுவை கருத்திற்கொள்ளுதலானது நிராகரிக்கப்படும் என குறிப்பிட்டு நிபந்தனையுடன் பெறுகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்தது. 53 உபகரண பொதிகளிற்காக 02 வழங்குனர்கள் மாத்திரம் விலைமனுக்களை சமர்ப்பித்திருந்ததுடன் 53 உபகரணங்களில் சில உபகரணங்களிற்கு மாத்திரம் விலைமனுக்களை சமர்ப்பித்திருந்த 06 வழங்குனர்களில், 04 வழங்குனர்களின் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன. 53 உபகரணப் பொதிகளிற்காக விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென குறிப்பிட்டு அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும் ஒவ்வொரு உபகரணத்திற்கும் தனித்தனியான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 53 உபகரணங்களிற்கும் தனித்தனியான விலைமனுக்கள் கோரப்பட்டிருந்தால் இதைவிட அதிகளவான விலைமனுக்களை பெற்றிருக்க முடிதல் மற்றும் மிகச்சிறந்த மூலப்பொருட்களை மிகச்சிறந்த வழங்குனரிடமிருந்து பெறமுடிதல் என்பவற்றை நிறுவனம் இழந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. ஒவ்வொரு உபகரணத்திற்கும் தனித்தனியான தொழில்நுட்ப மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 53 உபகரணங்களும் ஒரு வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 53 உபகரணங்களில் 10 உபகரணங்களின் தொழில்நுட்ப மதிப்பீடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது 05 உபகரணங்கள் தேவையான அளவீடுகளை பூர்த்தி செய்திருக்காத போதிலும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது ரூபா 23.56 மில்லியன் செலவிட்டு பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்திற்கு செவிப்புல கட்புல உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செவிப்புல கட்புல உபகரணத்தை வழங்குதல், நிறுவுதல், பரிட்சித்தல் பயிற்சியளித்தல் மற்றும் பராமரித்தல் என்பவற்றிற்காக விலைமனுக்கள் கோரப்பட்டு புதினப்பத்திரிகை விளம்பரம் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும் பெறுகை ஆவணங்களின் தொகுதியிலிருந்து செவிப்புல கட்புல உபகரணத்திற்கப்பால் பாதுகாப்பு முறைமைகள், சோபா செற்றிகள், புத்தக இறாக்கைகள், கோவை கபினெற்றுக்கள், கணனி மேசைகள், நிறைவேற்றுனர் கதிரைகள், அலுவலக கதிரைகள் போன்றவற்றை கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்பட்டிருந்தன. அதற்கிணங்க, விலைமனுக் கோரல் அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டிருக்காத அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடம் கொள்வனவு செய்வதற்காக பெறுகை ஆவணங்கள் தயாரிக்கப்பட்டதன் காரணமாக அலுவலக உபகரணம் மற்றும் தளபாடத்திற்காக போட்டி விலைக்கேள்விகளை சமர்ப்பித்தல் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

(ii) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.2.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் போட்டி விலைக்கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு 21 நாட்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும் அவற்றிற்காக 18 நாட்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன.

(iii) நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு 3 தடவைகள் மாற்றப்பட்டிருந்த போதிலும் அதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 25 விடயங்களிற்காக தொழில்நுட்ப குறிப்புரைகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் ஒவ்வொரு பொருளும் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்டதா என உறுதிப்படுத்துவதற்கான எழுத்துமூல சான்றுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(v) நிராகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் 03 பிரதான பொருட்களிற்காக விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்நிறுவனம் விலைமனுக்களை சமர்ப்பித்திருக்காத நிறுவனமொன்றாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அது மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(vi) வீடியோ கமெரா, அதற்கு தேவையான பற்றரிகள் மற்றும் பதியும் கருவி என்பவற்றிற்காக ரூபா 950,000 இற்கு விலைமனு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக கவனத்திற்கொள்ளாமல் வீடியோ கமெரா மற்றும் அதற்குத் தேவையான பற்றரிகள் மற்றும் பதியும் கருவி என்பன முறையே ரூபா 2,500,000 மற்றும் ரூபா 1,836,000 செலவிட்டுக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(இ) பொரளை ஆயுர்வேத வைத்தியசாலை நிர்மாணத்தின் இரண்டாம் கட்டத்திற்குரிய ஒப்பந்தத்தின் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 1,113.16 மில்லியன் தொகையானதுடன் 2017 பெப்ரவரி 17 வரையிலும் ஒப்பந்ததாரரிற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த பெறுமதி சேர் வரி தவிர்ந்த மொத்தத் தொகை ரூபா 798.65 மில்லியனாகும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒப்பந்தத்தின் ஆலோசனையாளராகவிருந்த இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம். நிறைவேற்றப்பட்ட வேலையானது அளவிடப்பட்டு கொடுப்பனவு

சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் 19 ஆம் இலக்க இடைக்காலக் கொடுப்பனவுச் சான்றிதழிற்காக நிறைவேற்றப்பட்ட வேலை அளவிடப்படாமல் கொடுப்பனவுகள் சான்றுறுதிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அதனை கருத்திற்கொள்ளாமல் திணைக்களமானது அக் கொடுப்பனவுச் சான்றிதழை அடிப்படையாகக் கொண்டு 2017 பெப்ரவரி 17 இல் ஒப்பந்ததாரரிற்கு ரூபா 29.47 மில்லியன் தொகையை செலுத்தியிருந்தது.

(ii) 2016 திசெம்பர் 31 வரை ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்பட்ட 16 முரண் அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு ரூபா 47.52 மில்லியன் தொகை ஒப்பந்ததாரரிற்குச் செலுத்தப்பட்டிருந்தது, அவ் 16 முரண் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட 30 மேலதிக வேலைகளிற்காக விசேட கொடுப்பனவு விலைவீதங்களை சந்தை விலைகளை பயன்படுத்தி ஆலோசனை நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு ஒப்பந்ததாரரின் இணக்கப்பாட்டுடனும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெறப்பட்டும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்பட்ட விலைவீதங்களை அடிப்படையாகக்கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் சில விலைவீதங்கள் மாத்திரம் திருத்தப்பட்டிருந்தது. அத்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட அடிப்படை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மேலதிக வேலைகளிற்காக செலுத்தப்பட்ட மொத்தத் தொகை ரூபா 41.14 மில்லியன் ஆகும்.

(iii) ஒப்பந்ததாரருடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம், 540 நாட்களிற்குள் நிர்மாண வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்க வேண்டியதுடன் அதனால் 2015 மே 05 இல் வேலை ஆரம்பிக்கப்பட்டு 2016 ஒக்தோபர் 26 அளவில் வேலை பூர்த்திசெய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2016 திசெம்பர் 31 இல் சமர்ப்பிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் நிதிசார் செயன்முன்னேற்றம் ரூபா 743.27 மில்லியனாகவும் பௌதீக செயன்முன்னேற்றம் 63 சதவீதமாகவும் காணப்பட்டது.

(iv) செயற்திட்டக் காலப்பகுதி 67 நாட்களால் நீடிக்கப்பட்டிருந்த போதிலும் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.14.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் தாமதங்கள் ஏற்பட்டிருந்தமை ஒப்பந்ததாரர்களின் கட்டுப்பாட்டிற்கப்பாலான சூழ்நிலையின் ஏனைய நியாயமான காரணங்களா என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(v) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.7.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம், ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் ஒப்பந்த செலவினங்களை எதிர்கொள்வதற்கு போதுமானளவு நிதியேற்பாடுகள் கிடைக்கக்கூடியதாக உள்ளனவா என பெறுகை நிறுவனம் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டிய போதிலும் திணைக்களத்தால் போதுமானளவு நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்படாமல் பொரளை ஆயுர்வேத வைத்தியசாலையின் நிர்மாணத்தின் இரண்டாம் கட்டத்திற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக, 2016 திசெம்பர் 31 வரையிலும் ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட்டிருந்த தாமதக் கட்டணங்கள் ரூபா 16.79 மில்லியன் தொகையாகும்.

(vi) அளவீட்டுப் பட்டியலின் (BOQ) முதல் விடயத்திற்காக ஏற்கனவேயுள்ள கட்டிடத்தை உடைத்து அகற்றுதல் மற்றும் Dynamic Testing of Piles ஆகிய வடயங்களிற்காக பொறியியலாளர் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட விலைவீதங்களை விட ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்பட்ட விலைவீதங்கள் 786.86 சதவிதம் முதல் 1559.9 சதவீதம் வரையான வீச்சளவில் அதிகரித்துக் காணப்பட்டது. ஆனால் அது தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் கருத்தில் கொள்ளப்பட்டிருக்காததுடன்

ஒப்பந்ததாரருடன் கலந்துரையாடப்பட்டு அவ் விலைவீதங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) கட்டிடத்தின் கழிவகற்றல் முறைமை நிர்மாணத் திட்டத்தை தயாரிக்கும் போது புறக்கணிக்கப்பட்டிருந்ததுடன் பொறியியலாளர் மதிப்பீட்டிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்த பின்னர் கழிவகற்றல் முறைமையை நிர்மாணிக்கும் போது நடைமுறை சிக்கல்கள் தோற்றுவிக்கப்பட முடியும் என அவதானிக்கப்பட்டது.

(ஈ) பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்திலுள்ள ஆய்வுகூடத்தினை புதுப்பித்தல் மற்றும் முன்னேற்றுவதற்கான ஒப்பந்தப் பெறுமதி ரூபா 47.53 மில்லியன் தொகையானதுடன் மொத்த ஒப்பந்தப் பெறுமதி 2016 திசெம்பர் 31 அளவில் ஒப்பந்ததாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுப் பெறுமதி ரூபா 62.45 மில்லியன் தொகையான போதிலும் திணைக்களப் பெறுகைக் குழு உள்ளக தொலைபேசி முறைமை, கணனி இணைய முறைமை மற்றும் எரிவாயு முறைமை போன்ற விடயங்களை நீக்குவதன் மூலம் ரூபா 47.53 மில்லியன் வரை விலைமனுப் பெறுமதியை குறைத்து ஒப்பந்தத்தை வழங்குவதற்கு திணைக்களப் பெறுகைக் குழு தீர்மானித்திருந்தது. அவ்வாறு குறைக்கப்பட்ட விடயங்களின் பெறுமதி தனித்தனியாக குறிப்பிடப்பட்டிருக்காததுடன் அவ்விடயங்கள் குறைக்கப்பட்டதற்கான காரணமாக சாதாரண நடைமுறை ஊடாக அம்முறைமைகளைப் பெறுவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அம்முறைமைகள் கணக்காய்வுத் திகதியான 2017 யூன் 29 வரையிலும் ஆய்வுகூடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.14 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

திணைக்களத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பில் திணைக்களத்தால் சீர்செய்யப்படாத பந்திகளுக்கான தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2014 | 4.15 (அ) | 2012 யூலை 13 ஆந் திகதி திணைக்களத்திலிருந்து வென்னப்புவ பிரதேச சபைக்கு பணியிடமாற்றம் பெற்றுச் சென்ற வைத்தியருக்கு அன்று முதல் 15 மாதங்களுக்காக ரூபா 548,376 தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. அதில் ரூபா 200,000 மீள அறவிடப்பட்டிருந்த போதும் எஞ்சிய ரூபா 348,376 தொகை மற்றும் அரசாங்கக் கட்டணம் ரூபா 137,094 என்பவற்றை உள்ளடக்கிய ரூபா 485,470 மொத்தத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| 2015 | 3.11 | திணைக்களத்தின் லொறி வண்டி 2014 யூன் 03 ஆம் திகதி முதல் யூன் 27 ஆம் திகதி வரை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக அறவிடப்பட வேண்டிய வாடகையான ரூபா 102,261 தொகை கணக்காய்வுத் திகதியான 2016 யூன் 17 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

### 3.15 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டிற்காக மூலிகைப் பூங்காக்களில் உற்பத்தி செய்யப்பட வேண்டிய செடிகளின் வகை மற்றும் அளவிற்கான இலக்குகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதனால் 2016 ஆம் ஆண்டின் போது பயிரிடப்பட வேண்டிய செடிகளின் வகைகள் மற்றும் அளவுகள் மூலிகைப் பூங்காக்களிற்குப் பொறுப்பான உத்தியோகத்தரின் தற்றுணிவில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 2.46 மில்லியன் மொத்தப் பெறுமதியான 62,774 மூலிகைச் செடிகள் முறையான அங்கீகாரமின்றி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் போது 06 மூலிகை பூங்காக்களின் நாற்றுக்களிலிருந்து கட்டணமின்றி வழங்கப்பட்டிருந்தன. செடிகள் கட்டணமின்றி வேண்டப்பட்டிருந்ததென்றோ அல்லது யாருக்கு செடிகள் வழங்கப்பட்டிருந்ததென்றோ உறுதிப்படுத்துவதற்கு எழுத்துமூல சான்றெதுவும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.16 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறுள்ளது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 555 | 527 | 28 |
| (ii) | மூன்றாம் நிலை | 195 | 113 | 82 |
| (iii) | இரண்டாம் நிலை | 291 | 158 | 133 |
| (iv) | ஆரம்ப நிலை | 929 | 643 | 286 |
| | **மொத்தம்** | **1,970** | **1,441** | **529** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முறையான இடம்மாற்ற முறைமையொன்று அமுல்ப்படுத்தப்பட்டிருக்காததுடன் 10 வருடங்களிற்கு அண்மித்த காலத்திலிருந்து இடம்மாற்றம் பெற்றுக்கொள்ளாமல் ஒரே சேவை நிலையத்தில் சேவையிலுள்ள 435 உத்தியோகத்தர்கள் காணப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதில் சில உத்தியோகத்தர்கள் முதல் நியமனத் திகதியிலிருந்து ஒரே சேவை நிலையத்தில் சேவையாற்றுகின்றமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

(ii) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆயுர்வேத திணைக்களத்தின் கீழுள்ள 07 வைத்தியசாலைகள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் வைத்தியசாலையொன்றின் செயற்பாட்டிற்குத் தேவையான சில அத்தியாவசிய பதவிகள் சில வைத்தியசாலைகளிற்கு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. சில வைத்தியசாலைகளில் பெரிய அளவில் வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.